# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் - 03.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 15470/F/2023**

திரு. அ.கனகராஜ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
திருப்பத்தூர்-635 601

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 03.06.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 30.06.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 28.08.2023 |

*******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட இவ்வழக்கு இன்று (03.04.2025) இவ்வாணையத்தால் நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. அ.கனகராஜ் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு பெ.சென்னகேசவன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 8-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. அவர் சார்பாக திருமதி. தேன்மொழி தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருப்பத்தூர் மாவட்டம் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திருப்பத்துதூர் மாவட்டத்தை சார்ந்த அனைத்து வருவாய் கிராமங்களில் இதில் பழைய ரயத்துவார் / பிரிட்டிஸ் கீழ்காலணி ஆட்சி /சர்க்கார் /அயன் வருவாய் உட்பட உள்ள அனைத்து எஸ்டேட் மற்றும் இனாம் எஸ்டேட் (மைனர் இனம்) உட்பட உள்ள அனைத்து எஸ்டேட் வருவாய் கிராமங்களையும் அரசால் முறையாக 26/48,26/63 மற்றும் 30/63 ஆகிய இவ்சட்டத்தின் கீழ் ரயத்துவாரியாக மாற்றப்பட்டதையடுத்து நிலஅளவை திட்டதுறையால் உருவாக்கப்பட்டது என்பது போன்ற முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த பின்னரும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் நாளதுவரை மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்படாததால், மனுதாராரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (03.04.2025) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4 .இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண். ஆர்.எஸ்.1-46-2024 நாள் 01.04.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்து அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்..

5. இன்றைய தின விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளது வரையில் முழுமையான தகவல்கள் வழங்காத அலுவலர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவ்வாணையத்தில் கோரினார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

***. மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து மேல்முறையீட்டாளர் கோரியுள்ள மனுவின்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)ன்படி ஆஜர்படுத்தி, மேல்முறையீட்டாளர் பார்வை செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, பார்வை செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, உரிய சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் பார்வை செய்த வீடியோ அல்லது புகைப்படத்தையும் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து***

*இவ்வாணையத்திற்கு நேரில் வந்து சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/(மா.செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 15470/F/2023**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்-635 601

**மனுதாரர் SA 15470/F/2023**

திரு. அ.கனகராஜ்
த/பெ அரசகுமார்,
நாடார் தெரு,
விளாத்திகுளம்-628 907
தூத்துக்குடி மாவட்டம்

Copy to: File
VPS /PA /15.04.2025